# காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்.

Praise the Lord:

Let us pray. ..

"தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்" என்ற வார்த்தையின்படியே கர்த்தர் நம்மை ஆசீர்வதித்து, ஆட்கொள்வாராக. ஆமென்.

கர்த்தராகிய கிறிஸ்துவின் கிருபையினாலே இரட்சிக்கபட்டோம்,

இப்பொழுது கிறிஸ்துவுக்குள் வாழ்ந்து, இரட்சிப்பிலே வளர்ந்து வருகிறோம்.,

கிறிஸ்துவிடமிருந்து ஞானத்தைப்பெற்று இரட்சிப்பில் பூரணப்பட பிரயாசப்படுகிறோம்.

எபேசியர்/Ephesians 5:16 (பக்கம் 268)

நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்.

தேவன் கொடுக்கும் ஞானத்தினால், நமக்காக தேவன் என்ன சித்தம் வைத்திருக்கிறார் என அறிந்து, அதை நன்றாக உணர்ந்து, அதற்காக காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளவேண்டும்.

உலக ஞானம் ஒன்றுக்கும் உதவாது. கர்த்தருடைய ஞானம் நம்மை நித்திய நித்தியமாக வழிநடத்தும். ஆமென்.

சிறுவயதிலே…..எனது தந்தையின் வருமானம் நிலையான சூழ்நிலைகளில் இல்லாததினாலே, எனது அம்மாவின் அப்பா, Grandfather அவருடைய தையல் தொழில் வருமானத்தில், யாரையும் பொருட்படுத்தாமல் எங்கள் குடும்பத்திற்கு ஆதரவு கொடுத்து எங்களை வளர்த்தார். அதேசமயத்தில் எங்கள் உறவினரில் ஒரு அனாதையான (தாய் தந்தையை இழந்த) ஒரு ஆண்பிள்ளையையும் தான் ஏற்று, அவரையும் எங்களோடு வளர்த்து, தையல் தொழில் கற்றுக்கொடுத்து, அவருக்கும் ஒரு குடும்பத்தை ஏற்படுத்தினார். இத்துடன் அவருக்கு தெய்வம் என்று அறிந்த தெய்வீக காரியத்தில், எங்கள் வீதியிலேயுள்ள கோவிலுக்கு மிகவும் உற்சாகத்துடனும் பொறுப்புடனும் செயல்பட்டார்.

பல கஷ்டமான சூழ்நிலைகளிலின் மத்தியிலும் அவருடைய நோக்கத்தில் ஒரு நாளும் சோர்வோ, தளர்ச்சியோ இருந்தது இல்லை. இவ்வளவு பிரயாசங்களைச் செய்தவர், மிக மிக கஷ்டமான ஒரு சில சூழ்நிலைகளில் ஒரு வார்த்தை சொல்வார். "சாகிறவரை கஷ்டப்பட்டால் வாழ்வது எந்த காலம்" இப்படிச் சொன்னாலும், அவருடைய செயல்பாட்டிலே எந்தவொரு உற்சாகக்குறைவும் இருக்காது. சிறியவயதிலே இதை கவனித்த எனக்கு, அவருடைய செயல்பாட்டின் உறுதியும் உற்சாகமும் என்னை மிகவும் கவர்ந்தது.

நாங்கள் வளர்ந்து ஒரு நல்ல உத்தியோகத்திற்கு வருவதற்குள் எனது Grandfather இறந்துவிட்டார். சுமார் 72 வயது இருக்கலாம். கடைசிவரையிலும் அவர் உழைத்து எங்களுக்கு ஆதரவு கொடுக்க அவருக்கு தேவன் பெலனைக் கொடுத்தார்.

"சாகிறவரை கஷ்டப்பட்டால் வாழ்வது எந்த காலம்" என்று அவர் சொன்னது அவருடைய உலக ஞானம் கொடுத்த வார்த்தை.

கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம். (பிலி. 1:21)

என்று அவருக்கு சொல்ல, எங்கள் ஊரிலே தெய்வீக ஞானததிலே வளர்ந்தவர்கள் அப்பொழுது இல்லை.

நாங்கள் பொறுப்பெடுத்த கோவில் வருடாந்த விழாவுக்காக, வருடம் முழுவதும் (ஒரு சில விஷேட நாட்களைத்தவிர) ஒவ்வொரு நாளும் நான் எனது ஊரிலே இருந்தவரையிலும் (20வயது வரை) உண்டியல் எடுத்துச்சென்று காணிக்கை வசூல்செய்வேன். கடைத்தெருவிலே ஒவ்வொரு கடைகளிலும். இருப்பவர்கள் இந்துக்கள் மட்டுமல்ல, இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் அதிலே இருப்பார்கள். ஒரு விக்கிரக ஆராதனைக்கு இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் கொடுக்கிறார்கள் என்று சொன்னால், அங்கே தெய்வீக ஞானம் எந்த அளவிலே இருந்திருக்குமென்று சற்று சிந்தித்துப் பாருங்கள்.

நான் சொல்லும் காலக்கட்டத்தில், கிறிஸ்தவர்கள் அப்படித்தான் என்று சொல்லமுடியாது.

அந்த காலக்கட்டத்திற்கு பல வருடங்களுக்கு முன்பே வாழ்ந்த Mother Teresa எப்படி தன்னையே கிறிஸ்துவுக்காக முழுமையாக அர்ப்பணித்தார்கள்?

கிறிஸ்துவுக்குள்ளும் அவரது வார்த்தைக்குள்ளும் ஒருவரின் தனிப்பட்ட உறவு வளர்கிறது என்று சொன்னால், அந்த மனிதனுக்கு, கிறிஸ்து தன் மூலம் நிறைவேற்ற வைத்திருக்கும் சித்தம் செய்ய, எந்த சூழ்நிலையும் தடையாக இருக்கமுடியாது.

எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது. (2 கொரிந்தியர் 4:16) என்ற வசனம் நம்மிலே ஜீவிக்குமானால், சூழ்நிலைகளை உதரித் தள்ளிவிட்டு, கிறிஸ்துவுக்குள் முன்னேறிச்செல்ல முடியும்..

Grandfather இந்த உலகத்துக்கு பிரயோஜனமாக இருந்திருந்தாலும், அவரைப் படைத்த தேவனின் சித்தத்திற்குப் பிரயோஜனமாக இல்லாமல் போய்விட்டார்.

உலக ஞானத்தைப்பற்றி உலக ஞானமே சொல்கிறது: ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது.

*தேவனுடைய வசனம்:*

…..தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி.

தேவனுடைய வார்த்தை இவ்வலகத்துக்கும் அவ்வுலகத்துக்கும் உதவும். (மத் 4:4)

ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. (யோவா. 6:63)

ஒன்றுக்கும் உதவாத உலகஞானத்தினாலே, ஒருசிலர் இந்த உலகத்திலே, அன்றாட வாழ்க்கையின் பெலவீனத்திலே சோர்ந்து போகாமல், மிகவும் சிறப்பாக உலகசித்தத்திற்கு வாழ்ந்திருக்கிறார்கள் என்று சொன்னால்,

ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிற தேவவசனத்திலே வளர்கிற நம்மிடத்திலே தேவசித்தத்திற்கு செயல்பட எந்த அளவிற்கு உற்சாகமும், வாஞ்சையும், எழுப்புதலும் இருக்கவேண்டும்.??

பாவத்திற்கு எதிராக போராடும் எழுப்புதல்,

பரிசுத்தத்திலே வளரக்கூடிய ஒரு எழுப்பதல், அபிஷேகத்திலே வளரக்கூடிய ஒரு எழுப்புதல்,

ஜெபஜீவியத்திலே வளரக்கூடிய ஒரு எழுப்புதல், விசுவாசத்திலே வளரக்கூடிய ஒரு எழுப்புதல்,……

மற்றவர்களுக்கு சுவிசேஷம் சொல்வதிலே ஒரு எழுப்புதல்….

என்ற பல எழுப்புதல்கள் நம்மிலே காணப்பட தேவஞானத்தைக் கேட்போம்.

எபேசியர்/Ephesians 5:16 (பக்கம் 268)

நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்.

நீங்கள் உங்களுக்குக் கிடைத்துள்ள ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்தி நற்செயல்களைச் செய்யுங்கள். (பரிசுத்த பைபிள்)

நாம் வாழும் இக்காலத்தை முற்றும் பயன்படுத்துங்கள். இது பொல்லாத காலம். (Catholic Bible)

making the most of every opportunity, because the days are evil (NIV)

Redeeming the time, because the days are evil. (KJV)

Making the very most of the time [buying up each opportunity], because the days are evil. (AMP)

நாம் பயன்படுத்தினாலும் பயன்படுத்தாவிட்டாலும் காலம் கடந்து செல்லும்.

நமக்கு கர்த்தர் கொடுத்துள்ள காலங்களை, வாய்ப்பை நற்காரியங்களுக்கு பயன்படுத்த வேண்டும்.

நன்மையான எந்த ஈவும் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது. …(யாக். 1:17)

ஜீவனுள்ள வசனங்களை வாசித்து தியானிக்க தியானிக்க, கர்த்தர் எனக்குக் கொடுத்துள்ள காலத்தை நான் முற்றுமாக பிரயோஜனப்படுத்தவில்லையே என நான் பல நேரங்களிலே மிகவும் வேதனைப்பட்டு ஜெபிக்கும் சூழ்நிலையை நான் அடைகிறேன். நீங்களும் அப்படிப்பட்ட சூழ்நிலையை அடைந்திருக்கலாம்.

நடந்து முடிந்தவைகளைப் பற்றி கவலைப்படாமல், கர்த்தர் நமக்குக் கொடுக்கும் பெலத்தோடு நாம் மிகுதியான காலத்தை கவனமாக பயன்படுத்த வாஞ்சிப்போம்.

அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்; (சங். 91:14) என்ற வசனம் நம்மிலே ஜீவிக்கக்கூடிய வகையிலே, நாம் வாழும் இக்காலத்தை முற்றும் பயன்படுத்த, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுவோம்.

**இதற்கு முன் வசனம்….எபேசியர்/Ephesians 5:15**

ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், **ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து,**

Be very careful, then, how you live—not as unwise but as wise, (NIV)

See then that ye walk circumspectly, not as fools, but as wise, (KJV)

Look carefully then how you walk! Live purposefully and worthily and accurately, not as the unwise and witless, but as wise (sensible, intelligent people), (AMP)

*(இந்த 5ம் அதிகாரத்தை முழுமையாக வாசித்து மேலும் தியானியுங்கள்…)*

கிறிஸ்துவே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார். (1கொரி 1:31)

இப்பொழுது நாம் செய்கிற கர்த்தரின் காரியங்களை இன்னும் முழுமையாக எப்படிச்செய்வது? என்று கர்த்தரிடம் கேட்போம். கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து,

நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுவோம்.

**இதற்கு அடுத்த வசனம்….எபேசியர்/Ephesians 5:17**

ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று **உணர்ந்துகொள்ளுங்கள்.**

Therefore do not be foolish, **but understand** what the Lord's will is. (NIV)

Don't act thoughtlessly, but understand what the Lord wants you to do. (NLT)

Wherefore be ye not unwise, but understanding what the will of the Lord is. (KJV)

Therefore do not be vague and thoughtless and foolish, but understanding and firmly grasping what the will of the Lord is. (AMP)

கர்த்தர் நம் மூலமாக எப்படி அவர் சித்தத்தை நிறைவேற்ற இருக்கிறார் என்பதை நாம் தெரிந்துகொள்ள வாஞ்சையாயிருப்போம்.

காலத்தை அறிந்தவர்களாய், இரவு சென்றுபோயிற்று, பகல் சமீபமாயிற்று; ஆகையால் அந்தகாரத்தின்கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக்கடவோம். என்ற வசனத்தின்படி, நாம் சீராய் நடந்து கொண்டு, நாட்கள் பொல்லாதவைகளானதால், தேவன் நமக்குக் கொடுத்துள்ள காலத்தை அவருடைய சித்தம் நிறைவேற்ற பிரயோஜனப்படுத்திக்கொள்ள, ஆண்டவரே நீர் எங்களுக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமாக எங்களோடு என்றும் வாசம் செய்து எங்களை ஆட்கொண்டு வழிநடத்தும் என தேவனை நோக்கி கிறிஸ்து மூலமாக மன்றாட, கிறிஸ்துவுக்குள் பெலப்பட்டு, எழுந்து நிற்போம்.

ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியானவர் நம்மை ஆட்கொள்வாராக.

## Let us pray. ..

*சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும், கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று.*

For God was pleased to have all his fullness dwell in Christ, and through Christ to reconcile to himself all things, whether things on earth or things in heaven, by making peace through his blood, shed on the cross.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.